வவுச்சருக்கு காலணிகளை வழங்குவதற்கு தாங்களும் பதிவுசெய்து கொள்ளுங்கள்

கல்விக்கான சம வாய்ப்புகளை உறுதிப்படுத்தி, 13 வருட தொடர்ச்சியான கல்வியைப் பெறுவதற்கு மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் "2027 ஆம் ஆண்டிற்காகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள், பிரிவெனாக்களின் பிக்குமார் மற்றும் பிக்குமார்களல்லாத மாணவர்கள் மற்றும் சீலமாதாக்களுக்கு ஒரு ஜோடி காலணிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வவுச்சர்களை வழங்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு" கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு இம்முறையும் செயற்படுகிறது

இதன் கீழ் நாடு முழுவதும் 250 மாணவர்களுக்குக் குறைவான பாடசாலைகளின் மாணவர்கள், 500 மாணவர்களுக்குக் குறைவான பெருந்தோட்டப் பாடசாலைகள், விசேட தேவையுடைய பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் கல்வி கற்கும் பிக்குமார் மற்றும் பிக்குமார்களல்லாத மாணவர்கள் மற்றும் சீலமாதாக்களுக்குப் பாடசாலைக் காலணி ஒரு ஜோடி வழங்குவது மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த நியதிகளின் கீழ் தெரிவுசெய்யப்படும் மேல், தெற்கு, சபரகமுவ, கிழக்கு மற்றும் வடமேல் ஆகிய 05 மாகாணங்களின் பாடசாலைகளுக்காக பிரத்தியேகமான செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுவதுடன், அதற்காகத் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அமைச்சில் பதிவு செய்யப்பட்ட உள்நாட்டுக் காலணி உற்பத்தியாளர்கள் சம்பந்தப்பட்ட பாடசாலைக்கு வருகை தந்து சந்தையில் காணப்படும் தரமான காலணிகளை மாணவர்களுக்கு வழங்குவது மேற்கொள்ளப்படுகின்றது. இச் செயற்றிட்டம் செயற்படுத்தப்படுவதன் கீழ் மாணவர்களுக்கு வழங்கப்படும் வவுச்சர்களை பாடசாலைக்கு சமூகமளிக்கும் உள்நாட்டுச் காலணி உற்பத்தியாளர்களைத் தவிர வேறு வர்த்தகர்களிடமிருந்தும் காலணிகளைப் பெற்றுக்கொள்ள முடியாது.

மத்திய, வடக்கு, வடமத்திய மற்றும் ஊவா ஆகிய 04 மாகாணங்களுக்கு ரூபா 3,000.00 பெறுமதியான வவுச்சர்கள் வழங்கப்படுவதுடன், அதன் மூலம் பதிவுசெய்யப்பட்ட வர்த்தகர்களிடமிருந்து காலணிகளைக் கொள்வனவு செய்ய முடியும்.

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அமைச்சில் பதிவு செய்யப்பட்ட உள்நாட்டுச் காலணி உற்பத்தியாளர்களினால் பாடசாலைக்குச் சென்று காலணிகளை வழங்கும் முறை நடைமுறைப்படுத்தப்படும் மேல், தெற்கு, சப்ரகமுவ, கிழக்கு மற்றும் வடமேல் ஆகிய 05 மாகாணங்களின் பாடசாலைகளின் மாணவர்களின் வவுச்சர்களுக்கு அமையக் காலணிகளை வழங்கும் உள்நாட்டுச் காலணி உற்பத்தியாளர்கள், தங்களது கையடக்கத் தொலைபேசி ஊடாக Play Store இற்குச் சென்று Thilinapath Android செயலியைப் பதிவிறக்கம் செய்து, அதன் மூலம் ரூபா 2,000.00 ஐச் செலுத்துவதன் மூலம் பதிவை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இதன் கீழ் பதிவு செய்யப்படக் கூடியது சம்பந்தப்பட்ட காலணி உற்பத்தி நிறுவனங்களினால் அடையாளங் காணப்பட்டு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்படும் முகவர்கள் மட்டுமே ஆவர்.

மத்திய, வடக்கு, வடமத்திய மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களுக்கு காலணிகளை விற்பனை செய்வதற்காக பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, தங்களது கையடக்கத் தொலைபேசி ஊடாக Play Store இற்குச் சென்று Thilinapath Android செயலியைப் பதிவிறக்கம் செய்து, அதன் மூலம் ரூபா 2,000.00 ஐச் செலுத்துவதன் மூலம் பதிவை உறுதிப்படுத்தியதன் பின்னர் காலணிகளைக் கொள்வனவு செய்யும் மாணவர்களுக்குப் பாடசாலைக் காலணிகளை விற்பனை செய்வதற்கு தங்களுக்கும் சந்தர்ப்பம் உள்ளது.

பதிவு செய்வதற்குத் தேவையான தகவல்கள்

- வியாபாரப் பதிவுச் சான்றிதழ்.
- பதிவுசெய்யப்பட்ட வர்த்தகப் பெயரில் அல்லது வியாபார உரிமையாளரின் பெயரில் திறக்கப்பட்ட வங்கிக் கணக்கின் தகவல்கள்.
- இச் செயலியைப் பயன்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் தொலைபேசி இலக்கம்
- இச் செயலியைப் பயன்படுத்தி தேவையான அனைத்து அறிவுறுத்தல்கள் மற்றும் விபரங்களையும் மென்பொருளின் உதவிச் சேவைகளுக்கு பிரவேசிப்பதனூடாக பெற்றுக் கொள்ள முடியும்.
- தங்களது கையடக்கத் தொலைபேசி ஊடாக play store இற்குச் சென்று Thilinapath Android செயலியைப் பதிவிறக்கம் செய்து அதன் மூலம் ரூபா 2,000.00 ஐச் செலுத்துவதன் மூலம் பதிவை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.
- மேற்கண்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மென்பொருள் ஊடாகப் பதிவுசெய்யும் வர்த்தகர்கள் இவ் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், அச் செயலி ஊடாக மட்டுமே வவுச்சர்களில் குறிப்பிடப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் (scan) செய்வதனூடாக வவுச்சர்களுக்கு காலணிகளை விற்பனை செய்வதற்கான வசதிகள் செய்யப்படவுள்ளன.
- அதற்கமைய இம்முறைமை ஊடாகப் பதிவுசெய்யும் ஒவ்வொரு வர்த்தகருக்கும், காலணி வவுச்சர்களில் அச்சிடப்பட்ட QR குறியீட்டை ஸ்கேன் செய்வதற்காக (scan) ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி ஒன்று இருப்பது கட்டாயமானதாகும்.
- விற்பனை நிலைய உரிமையாளரினால் காலணிகளைக் கொள்வனவு செய்பவர்களுக்காக வழங்கப்படும் வவுச்சர்களின் செல்லுபடியாகும் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.
- தங்களால் வழங்கப்படும் காலணிகளுக்குரிய வவுச்சர்களின் பெறுமதி தங்களது வங்கிக் கணக்கிற்குச் வரவதற்கு இருமுறை நேரடியாக அனுப்பிவைக்கப்படும்.
- ஸ்கேன் செய்யப்படாத வவுச்சர்களுக்கு எவ்விதமான முறையீடும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது
- 2026.11.03 ஆம் திகதியிலிருந்து உள்நாட்டுச் காலணி உற்பத்தியாளர்களுக்கும் வர்த்தர்களும் பதிவுசெய்து கொள்ளலாம்.
- வவுச்சர்களின் செல்லுபடியாகும் காலம் 2026.11.10 ஆம் திகதியிலிருந்து 2026.12.20 வரை என்பதுடன், செல்லுபடியாகும் காலம் நிடிக்கப்படுமாயின் பின்னர் அறிவிக்கப்படும்.

2026.11.03 ஆம் திகதியிலிருந்து பதிவுசெய்தல் ஆரம்பிக்கப்படும்.



paly store இற்குச் சென்று Thilinapath Android செயலியைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 0112785573

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education